


# பயிற்சித் திட்ட அறிக்கை



## அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அரசினர் கலைக் கல்லூரி
## திருத்தணி - 631209

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அரசினர் கலைக் கல்லூரி
# திருத்தணி - 631209

## 2025 – 2026 ஆம் கல்வியாண்டு
## முதலாமாண்டு மாணவர்களுக்கான ஒரு வார கால அறிமுகப் பயிற்சித் திட்ட அறிக்கை




தமிழ்நாடு அரசு உயர்கல்வித் துறை சார்பில், 2025–2026 ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்குக் கல்வி சார்ந்த வழிகாட்டுதல்கள், அமைப்புகள், நன்மைகள் மற்றும் விதிமுறைகளை எடுத்துரைக்கும் வகையில், **அறிமுகப் பயிற்சித் திட்டம் (Orientation Programme)** நடத்தப்பட வேண்டும் என்றும் வழிகாட்டுதலின் படி, நம் திருத்தணி அரசினர் கலைக் கல்லூரியில் **30.06.2025 முதல் 05.07.2025** வரை 6 நாட்களுக்குப் பயிற்சி வகுப்புகள் இனிதே நடைபெற்றன.

**நோக்கம்:** மாணவர்கள் உயர் கல்விக்கான முறையான புரிதலுடன், நற்பண்புகளையும் சமூகப் பொறுப்புணர்வுகளையும் கொண்டு தங்கள் கல்விப் பயணத்தைத் துவங்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம்.

## 📅நாள் 1 – 30.06.2025, திங்கட்கிழமை

### மாணவர்களின் வருகையை வரவேற்கும் நிகழ்வாகத் தொடக்க விழா நடைபெற்றது.

- மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கி வரவேற்பு நிகழ்த்தப்பட்டது.
- வரவேற்புரையை முனைவர் சீ. சத்யபிரியா அவர்களும், தலைமை உரையை கல்லூரி முதல்வர் முனைவர் அ.ஏகாதேவசேனா அவர்களும், அறிமுக உரையை முனைவர் க.ப.ஹேமநாதன் அவர்களும் மற்றும் சிறப்புரையை **திருத்தணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு. எஸ். சந்திரன்,** அவர்களும் நிகழ்த்தினார்கள்.
- சிறப்பு விருந்தினர் மாணவர்களுக்கு வாழ்த்துரைகளை வழங்கி, உயர்கல்வியின் முக்கியத்துவம் மற்றும் மாணவர்களுடைய கல்வி முன்னேற்றத்திற்கான தமிழக அரசின் நலத் திட்டங்களைப் பற்றி விளக்கினார்.
- கல்லூரியில் பணிபுரியும் 25 முன்னாள் மாணவர்களுக்கு அவர்களை கவுரவிக்கும் பொருட்டு சிறப்பு செய்யப்பட்டது.












தினமணி

**திருத்தணி, செய்யூர் அரசுக் கல்லூரிகளில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்கம்**

திருத்தணி அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற முதலாம் ஆண்டு வகுப்புகள் தொடக்க விழாவில் பங்கேற்றோர்.

**திருத்தணி/மதுராந்தகம், ஜூன் 30:** மாணவர்கள் லட்சியத்துடன் முயற்சித்தால், இலக்கை எளிதாக அடைய முடியும் என திருத்தணி எம்எல்ஏ ச. சந்திரன் பேசினார்.

திருத்தணி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் இயங்கி வரும் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அரசு கலைக் கல்லூரியில், முதலாமாண்டு மாணவர்களுக்கு வரவேற்பு திங்கள்கிழமை நடைபெற்றது. முதல்வர் (பொ) ஏகதேவசேனா தலைமை வகித்தார்.

பேராசிரியர் ஹேமநாதன் வரவேற்றார். இதில் எம்எல்ஏ ச.சந்திரன் பங்கேற்று, முதலாமாண்டு மாணவர்களை வரவேற்று பேசியதாவது: மாணவர்களின் வாழ்க்கை தரத்தை நிர்ணயம் செய்வது பட்டப் படிப்பு தான். ஆகையால், மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்துவிட்டோம் என்று நினைக்காமல், தன்னம்பிக்கை, விடா முயற்சி மற்றும் கடின உழைப்புடன் படித்தால் நீங்கள் நினைத்த இலக்கை அடைய முடியும்.

நம்பிக்கையுடன் படித்தால் உயர்ந்த பதவிகளை எளிதாக அடைய முடியும் என பேசினார். நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என 200 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**செய்யூரில்...**

செய்யூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதலாண்டு துவக்க நிகழ்வு திங்கள்கிழமை காலை நடைபெற்றது.

வரலாற்றுத் துறை இணை பேராசிரியர் மு.பிரசாந்த் வரவேற்றார். முதல்வர் (கூடுதல் பொ) சு.மாதவன் தலைமை வகித்தார். முதலாண்டு வகுப்புகளை செய்யூர் எம்எல்ஏ பனையூர்பாபு தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்வில் செய்யூர் ஊராட்சி மன்றத் தலைவர் லோகநாயகி, அரசியல் அறிவியல் துறை இணை பேராசிரியர் ஜோதிராமலிங்கம், வணிக நிர்வாகவியல் துறை ராமச்சந்திரன், மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். மரக்கன்றுகளை எம்எல்ஏ பனையூர் பாபு நட்டார். வணிகவியல் துறை இணை பேராசிரியர் அ.தனபாலன் நன்றி கூறினார்.




GPS Map Camera
Google
Methinipuram, Tamil Nadu, India
5jvv+m59, Methinipuram, Tamil Nadu 631003, India
Lat 13.193377° Long 79.641266°
30/06/2025 11:14 AM GMT +05:30









## 📆 நாள் 2 – 01.07.2025, செவ்வாய்க்கிழமை

### சமூகப் பணிகளில் மாணவர்கள் பங்கேற்பு குறித்த விழிப்புணர்வு

- உடற்கல்வி இயக்குநர் முனைவர் சு. ராஜேஷ் கார்த்தி அவர்கள் கல்லூரியில் உடற்கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றியும், அதன் பணிவாய்ப்புகளைப் பற்றியும் விளக்கினார்.
- தேசிய மாணவர்படை அலுவலர் முனைவர் க. ப. ஹேமநாதன் அவர்கள் சமூகத்தில் ஒழுக்கம் மற்றும் தலைமைத்துவத்தை மேம்படுத்துவதில் தேசிய மாணவப் படையின் பங்கைப் பற்றியும் விளக்கினார்.
- NSS அலுவலர் முனைவர் வே. பாலாஜி அவர்கள் நாட்டு நலப் பணித்திட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கினார். மேலும் அவர் செஞ்சிலுவைச் சங்கம் (YRC), நுகர்வோர் சங்கம் (Consumer Club) மற்றும் ரெட் ரிப்பன் கிளப் )Red Ribbon Club) ஆகியவற்றில் மாணவர்களின் பங்களிப்பு பற்றியும் மற்றும் அதன் செயல் திட்டங்கள் பற்றியும் விளக்கினார்.











## 📅 நாள் 3 – 02.07.2025, புதன்கிழமை

### மாணவர்களின் நலனில் வங்கியின் செயல்பாடுகள்

- திருத்தணி, பாரத ஸ்டேட் வங்கி மேலாளர் திரு. J. ராம்குமார் அவர்கள் மாணவர்களுக்கு வங்கியின் செயல்பாடுகள் மற்றும் பாதுகாப்பான பரிவர்த்தனைகளைப் பற்றி விளக்கினார். மேலும் கல்விக்கடன், தொழில் தொடங்குவதற்கான வங்கியின் கடன் உதவிகள் மற்றும் வங்கியில் வேலை வாய்ப்புகள் பற்றி விளக்கினார்.
- பேராசிரியர் சீ. பரிமளாதேவி (புதுமைப் பெண் திட்ட ஒருங்கிணைப்பாளர்) அவர்கள் புதுமைப் பெண் திட்டத்தைப் பற்றியும் உயர்கல்வியில் பெண்களின் முன்னேற்றத்தைப் பற்றியும் விளக்கினார்.
- முனைவர் வ. தீனதயாளன் (தமிழ்ப் புதல்வன் திட்ட ஒருங்கிணைப்பாளர்) அவர்கள் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார்.
- முனைவர் சீ. சத்யபிரியா (நான் முதல்வன் திட்ட ஒருங்கிணைப்பாளர்) அவர்கள் நான் முதல்வன் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் பணிவாய்ப்புகள் பற்றியும் விளக்கினார்.
- முனைவர் அ. செந்தில்ராஜன் (பல்கலைக்கழக மேலாண்மைத் தகவல் அமைப்பு ஒருங்கிணைப்பாளர்) அவர்கள் பல்கலைக்கழக மேலாண்மைத் தகவல் அமைப்பு (UMIS) குறித்த விளக்கங்களை அளித்தார்.










## 📅 நாள் 4 – 03.07.2025, வெள்ளிக்கிழமை

### சைபர் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு

- வழக்குரைஞர்கள் திரு. P. குப்பன் மற்றும் திரு. P. சௌந்தரராஜன் ஆகியோர் மாணவர்களுக்கு சைபர் குற்றங்கள், அடிப்படைக் உரிமைகள் மற்றும் அடிப்படை கடமைகள், சமூக முன்னேற்றத்தில் மாணவர்களின் பங்கு மற்றும் நீதித் துறைச் சார்ந்த வேலை வாய்ப்புகளைப் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தனர்.
- இளைஞர்களின் பாதுகாப்பு குறித்த சட்ட விழிப்புணர்வுகளை மாணவர்களுக்கு வழக்குரைஞர் திரு. P. குப்பன் அவர்கள் வழங்கினார்.
- தகவல் தொழில்நுட்பச் சிக்கல்கள் மற்றும் தீர்வுகள் குறித்த சட்ட விழிப்புணர்வுகளை மாணவர்களுக்கு வழக்குரைஞர் திரு. P. சௌந்தரராஜன் விளக்கமாக எடுத்துரைத்தார்.












## 📅 நாள் 5 – 04.07.2025, வியாழக்கிழமை

### உடல் நலம் மற்றும் சுகாதார விழிப்புணர்வு

- வட்டார மேம்பாட்டு அலுவலர் திருமதி லதா அவர்கள் மாணவர்களுக்குத் தாம் இருக்கும் இடத்தின் தூய்மைதான் சுகாதாரமான சூழலை உருவாக்கும் என்பதை மாணவர்கள் உணரும் வகையில் வளாகத் தூய்மை மற்றும் மாணவர் நலன் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.
- குடிமைச் சட்டம் மற்றும் உரிமைகள் பற்றிய விளக்கங்களை திருத்தணி காவல் ஆய்வாளர் திரு. மார்டின்மதியரசன் அவர்கள் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.
- கல்லூரியில் மாணவர்களுக்கான தங்கும் விடுதி வசதிகள் பற்றிய விவரங்களை கல்லூரி விடுதிக் காப்பாளர் திரு. V. கேசவன் அவர்கள் விளக்கினார்.







## 📅 நாள் 6 – 05.07.2025, **சனிக்கிழமை**

### இந்திய அரசியலமைப்புச் சட்டம் குறித்த விழிப்புணர்வு

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் குறித்த விளக்கங்களையும், சமூக நீதி மற்றும் சமத்துவ நோக்கு பற்றிய விழிப்புணர்வை மாணவர்களுக்கு வரலாற்றியல் துறை தலைவர் முனைவர் S.முருகவள்ளி அவர்கள் எடுத்துரைத்தார்.
- நூலகத்தின்பயன்கள் மற்றும் கல்வி மேம்பாட்டில் நூலகத்தின் பங்கு பற்றிய விளக்கங்களை மாணவர்களுக்கு நூலகர் முனைவர் P.பாலமுருகன் அவர்கள் விளக்கினார்.





இந்தப் பயிற்சித் திட்டம் மாணவர்களின் மனவளர்ச்சி, சமூகப் பங்கேற்பு, கல்வித் திட்டமிடல், பாதுகாப்பு உணர்வு, மற்றும் குடிமை உணர்வுகளை வளர்க்கும் ஒரு முழுமையான வடிவமாக அமைந்தது. மேலும் இப்பயிற்சித் திட்டம் மாணவர்களுக்குக் கல்லூரியின் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி, உயர் கல்விப் பயணத்தில் தன்னம்பிக்கையுடன் நகர்ந்து செல்வதற்கு உறுதுணையாக இருக்கும்.

*********

Student Feedback Link:

https://docs.google.com/spreadsheets/d/15R0CwvDWqO1Tbqz6XKMLS6Qs0katYDJ6D9Zza6YkxeQ/edit?usp=drive_link